முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1492

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.10.2023, திங்கட்கிழமை

1. அறமாக வாழுகின்ற அரங்கனே
அன்னதான பலம்கொண்ட தேசிகனே
வரமாக மக்களுக்கு நாளும் நாளும் வழங்கி
வையகத்தைக் காத்துவருகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 13ம் நாள், 30.10.2023, திங்கட்கிழமை)
வரமென அரங்கன் நாமஜெபங்கள்
வையகமெல்லாம் முழுங்கமுழுங்க
3. முழங்கவே ஆறுமுகன் யான் வெளிப்பட்டு
முழுமைபட இந்த கலியுகத்தில் ஞானவான்களை
குறைவின்றி உருவாக்கி இனிதே
குவலயமெங்கும் ஞானிகள் படைப்பெருக
4. பெருகவே கலியுகத்தை மாற்றுவேன்
பிரபஞ்சமெங்கும் ஓங்காரம் முழங்க
முழங்கவே ஞான ஆட்சிக்காலத்தை உயர்வாக
அரங்கன் அவதாரத்தின் நோக்கம்வழி ஆறுமுகன் யான் பூர்த்திசெய்வேன்
5. செய்யவே அற்புதங்கள் கலியில் தர்மவழி நடந்துவர
சித்திமிகு அரங்கன் தர்மத்தை ஏற்று வணங்கி
ஜெகம் எல்லாம் உலகோர்
செய்து வந்தால் போதும்
6. அந்த அறத்தின் வழியே உலகுக்கு மாற்றம் நடக்கும்
உலகமெங்கும் பாதுகாப்பும் உருவாகும்
ஆகவே அற்புதத்தை அரங்கன் தர்மமாக்கி மக்களுக்கு அளித்துவர
உலகோர் அதனை பின்பற்றி ஏற்று

7. அகிலமெங்கும் தர்மபாதை உருவாக்கி
அளவில்லா தர்மசாலைகள் அமைத்து
அறம்செய்தால் போதும் உலகமாற்றம் சடுதி நடந்தேறும்
அரங்கன் சீடர்களாலும் அரங்கன் தர்மத்தாலும் இந்த அகிலம்
அற்புதத்தைக் காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—